# தெவினுவர பிரதேச சபை

## மாத்தறை மாவட்டம்

## 1. நிதிசார் கூற்றுக்கள்

### 1.1 நிதிசார் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2012 ஜூலை 02 ஆந் திகதியன்றும் முன்னைய ஆண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2011 ஜூலை 26 ஆந் திகதியன்றும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2012 டிசெம்பர் 12 ஆந் திகதி சபையின் தலைவருக்குச் சமர்ப்பிக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்ட எனது அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட கருத்துரைகள் மற்றும் அவதானிப்புரைகள் காரணமாக, கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட தெவினுவர பிரதேச சபையின் 2011 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் மீதான அபிப்பிராயத்தை எண்ணால் வெளியிட முடியாது.

### 1.3 நிதிசார் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

கீழே குறிப்பிடப்பட்ட கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டிற்கான விலைப்பட்டியலிடப்பட்ட முத்திரைக் கட்டணம் ரூபா 10,624,244 ஆகும். எனினும், ரூபா 9,429,689 ஆக அது கணக்கிலிடப்பட்டமையால் ரூபா 1,194,555 வித்தியாசம் ஏற்பட்டது.

(ஆ) அநேக ஆண்டுகளாக முன்கொண்டுவரப்பட்டவாறிருந்த ரூபா 821,986 தொங்கற் கணக்கு செலவு மீதி மீளாய்வாண்டிலும் தீர்த்து வைக்கப்படாதிருந்தது.

(இ) நிலையான வைப்பாகிய ரூபா 3,500,000 க்கான மீளாய்வாண்டின் பெறப்படவேண்டிய வட்டி வருவாய ரூபா 62,403 ஆகும். இது கணக்கிலிடப்படவில்லை.

**1.3.2 கணக்கிணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்**

நிதிசார் கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டு முடிவில் 7 கணக்கீட்டு விடயங்களது மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 29,848,796 ஆகும். உப பதிவேட்டின் பிரகாரம் கூட்டுத்தொகை ரூபா 26,827,240 ஆகியமையால் ரூபா 3,021,556 வித்தியாசம் ஏற்பட்டது.

**1.3.3 கணக்காய்விற்கான சான்றின்மை**

**(அ) பதில் கிடைக்கப்பெறாத கணக்காய்வு ஐயவினாக்கள்**

2012 செப்டம்பர் 20 ஆந் திகதியளவில் 21 கணக்காய்வு ஐய வினாக்களுக்குப் பதில் வழங்கப்படவில்லை.

**(ஆ) கணக்காய்விற்குத் தகவல்களைச் சமர்ப்பிக்காமை**

தேவையான தகவல்களைக் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்காமையால், ரூபா 87,678,273 கூட்டுத்தொகையுடைய கொடுக்கல் வாங்கல்களைக் கணக்காய்வில் திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியவில்லை.

**2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு**

**2.1 நிதிசார் விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிசார் கூற்றுக்களின் பிரகாரம், சபையின் 2011 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான மீண்டுவருஞ் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 7,500,599 ஆகும். இதனோடொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவருஞ் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 5,636,260 ஆகும்.

## 2.2 வருவாய் நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருவாய், உள்ளபடியான வருவாய், வருவாய் நிலுவை என்பன

மீளாய்வாண்டின் பொருட்டுத் தலைவரால் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருவாய், உள்ளபடியான வருவாய், வருவாய் நிலுவை தொடர்பான தகவல்கள் கீழே காணப்படுகின்றன.

| | வருவாய் விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளபடியானது | டிசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 |
| (i) | தீர்வையும் வரியும் | 1,907 | 901 | 1,867 |
| (ii) | குத்தகை வாடகை | 10,643 | 13,543 | 4,069 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 307 | 207 | 73 |
| (iv) | பிற வருவாய் | 21,528 | 24,411 | 18,475 |

### 2.2.2 நீதிமன்றத் தண்டப் பணமும் முத்திரைக் கட்டணமும்

மாகாண சபையின் தலைமைச் செயலாளர் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து 2011 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு பெற வேண்டியிருந்த தொகை கீழே காணப்படுகின்றது.

| | | ரூபா |
|---|---|---|
| (i) | நீதிமன்றத் தண்டப் பணம் | 275,000 |
| (ii) | முத்திரைக் கட்டணம் | 6,007,413 |

### 2.2.3 கடை வாடகை

மீளாய்வாண்டு முடிவில் உள்ளவாறு 111 கடைக் குத்தகையாளரிடமிருந்து ரூபா 3,026,320 நிலுவையாக இருந்தது.

### 2.2.4 25.எச்.பீ100373 ஆம் இலக்கப் படகை குத்தகைக்கு வழங்குதல்

2007 ஆம் ஆண்டில் இடர் முகாமைத்துவ நிலையத்திடமிருந்து சபைக்கு வழங்கப்பட்ட 25 எச்.பீ 1000373 ஆம் இல்க படகைக் குத்தகை வழங்குதல் தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) 2008 மே 1 தொடக்கம் 2008 டிசெம்பர் 31 வரையான காலப்பகுதிக்கு உடன்படிக்கை இன்றி நபர் ஒருவருக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. அக்காலப்பகுதிக்கான குத்தகை அறவிடப்படவில்லை.

(ii) 2011 ஆம் ஆண்டிற்கெனக் கேள்விகளைக் கோரி குத்தகைக்கு வழங்குவதற்குத் தீரமானிக்கப்பட்ட போதும், 2011 ஜனவரியில் படகு இயந்திரம் சபையில் இருக்கவில்லை என்பதனால் கேள்வியை வழங்கமுடியாதிருந்தது.

(iii) 2011 ஆம் ஆண்டில் கேள்வியைப் பெற்றநபருடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்படவில்லை. எனினும், 2011 மே மாதத்தில் குத்தகையாளர் சபையின் அனுமதியின்றி படகின் இயந்திரத்தை எடுத்துச் சென்றிருந்தார். 2012 செப்டம்பர் 3 ஆந் திகதி கணக்காய்வு விசாரணையின் பின்னர் படகின் இயந்திரம் சபையிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது.

### 2.3 பயன்படுத்தப்படாததும் குறைவாகப் பயன்படுத்தப்படுவதுமான பௌதிக வளங்கள்

2007 ஆம் 2008 ஆம் ஆண்டுகளின் போது சபை தனதுடைமையாக்கிக் கொண்ட ரூபா 146,750 பெறுமதியான கலப்பை மின் உற்பத்தி இயந்திரம், படகு இயந்திரம், கொங்கிரீட் கலவை, வேறு வகையானச் உபகரணங்கள் என்பவற்றை உள்ளடக்கிய நிலையான சொத்துக்கள் ஆறும் எவ்வித பயனுமின்றி சபையின் பிரிவொன்றில் இருந்தன. மேலும், இராணுவத்தின்வசமிருந்த 53-5701 இலக்க டபள் கெப் 27 ஜூலை 2011 அன்று சபையிடம் திருப்பி ஒப்படைக்கப்பட்டிருந்தது. அவ்வாகனம் பயன்படுத்துவதற்குப் பொருத்தமற்றதாக துருப்பிடிப்பதற்கு இடமளிக்கப்பட்டிருந்தது.

## 2.4 புண்ணிய கைங்கரியக் கொடுப்பனவுகளை வழங்குதல்

தெவினுவர எசல வியாபாரச் சந்தையில் பெறப்பட்ட வருவாயில் 2000 முதல் 2011 வரையான (2008, 2009 ஆண்டுகள் நீங்கலாக) காலப்பகுதியின் போது ஸ்ரீவிஷ்ணு கோவிலுக்குப் புண்ணிய கைங்கரியக் கொடுப்பனவை செலுத்துவதில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் 132(ஏ) மற்றும் (ஓ) பிரிவுகளின் பிரகாரம் ஆயிரம் ரூபாவிற்கு மேற்பட்ட புண்ணிய கைங்கரியக் கொடுப்பனவுகளை மேற்கொள்கையில் சபை அங்கீகரிக்கும் உதவு தொகையை முதல் அமைச்சரின் முன்கூட்டிய எழுத்துமூல அனுமதி பெறப்பட வேண்டுமாயினும், 2000 முதல் 2011 வரையான காலப்பகுதியின் போது கொடுப்பனவு செய்யப்பட்ட புண்ணிய கைங்கரியக் கொடுப்பனவாகிய ரூபா 8,600,000 க்கு முன்கூட்டிய அனுமதி பெறப்படவில்லை.

(ii) 2000 முதல் 2011 வரையான காலப்பகுதியின் போது சபை வழங்கிய ரூபா 11,650,000 புண்ணிய கைங்கரியக் கொடுப்பனவு தெவினுவர ஸ்ரீவிஷ்ணு கோவில் நிதியத்தால் பெறப்பட்டதற்கு நிதிப் பிரமாணம் 264 க்கமைய பற்றுச்சீட்டு பெறப்படவில்லை.

## 2.5 செயற்பாட்டு வினைத்திறமையின்மை

பின்வரும் அவதானிப்புரைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

### 2.5.1 வீதி விளக்குகளைப் பராமரித்தல்

சபையின் அதிகாரத்துக்குட்பட்ட பிரதேசத்தில் வீதி விளக்குகளைப் பராமரிப்பதற்கு விளக்குகளைப் பொருத்துவதற்காக ரூபா 688,897 வும் பராமரிப்பாளரது சம்பளமாக ரூபா 24,000 வும் எரிபொருள் செலவினம், சாரதியின் சம்பளம் என ரூபா 223,800 வும் உள்ளடங்கலாக மீளாய்வாண்டின் மொத்தச் செலவினம் ரூபா 936,697 ஆகும்.

இது தொடர்பாகப் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டில் சபையின் அதிகாரத்துக்குட்பட்ட பிரதேசத்தில் பராமரிக்கப்படும் வீதீ விளக்குகளுக்கு இலங்கை மின்சார சபையுடன் உடன்படிக்கை இருக்கவில்லை. 2011 ஆம் ஆண்டின் பராமரிப்புச் செலவினமாக ரூபா 74,052 கோரப்பட்ட போதும் கிடைக்கப்பெற்றது ரூபா 22,958 மாத்திரமே.

(ஆ) மின் குமிழ்களை மீளப் பொருத்துகையில் வீதியின் பெயர், விளக்குக் கம்ப இலக்கம், பொருத்திய திகதி, மின் குமிழின் உத்தரவாத காலம் எனும் தகவல்களுடன் கூடிய அறிக்கை பேணப்படவில்லை.

(இ) உள்ளூராட்சி நிறுவனத்தின் அதிகாரத்துக்குட்பட்ட பிரதேசத்தில் வீதிகளுக்கு வெளிச்சம் வழங்குவது தொடர்பாக மின்சக்தி அமைச்சின் செயலாளரது 1998 மார்ச் 16 ஆந் திகதிய ஐபீஈ/பீஈ/12/91 ஆம் இலக்கச் சுற்றறிக்கைக் கடிதத்தின் பிரகாரம் வீதி விளக்குகளது மின்சார நுகர்வு சபையின் அதிகாரத்துக்குட்பட்ட பிரதேசத்தில் வீடுகள் மற்றும் பொதுச் சில்லறை விடய நுகர்வின் 3% அதிகளவிற்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. சம்பந்தமாக சபையால் கருத்திற்கொள்ளப்படாததுடன் பொருத்துவதற்கு முடிவு செய்யப்பட்ட விளக்கு வகைகளைக் கொள்வனவு செய்திருக்கவுமில்லை.

### 2.5.2 ஒன்றிணைந்த திட்டமும் செயல்நடவடிக்கைத் திட்டமும்

ஒன்றிணைந்த திட்டமும் செயல்நடவடிக்கைத் திட்டமும் தயாரிக்கப்படாததுடன் சபையானது கொள்வனவுத் திட்டத்தையும் தயாரிக்கவில்லை.

## 2.6 மனிதவள முகாமைத்துவம்

(அ) சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கை 44 ஆகும். உள்ளபடியான பதவியணியினர் எண்ணிக்கை 62 ஆகும். மீளாய்வாண்டின் பதவியணியினர் சம்பளம் மற்றும் அங்கத்தவர் படி என்பவற்றிற்கான செலவினம் ரூபா 17,212,490 ஆகும். எனினும், உள்ளூராட்சி ஆணையாளரால் மீளளிப்புச் செய்யப்பட்டது ரூபா 12,045,330 ஆகும்.

(ஆ) திறைசேரிச் செயலாளரின் 2002 ஜனவரி 03 மற்றும் 2006 ஏப்ரல் 10 ஆந் திகதிய முகாமைத்துவச் சேவைச் சுற்றறிக்கை இலக்கம் 14 மற்றும் இலக்க 28 என்பனவற்றால் உள்ளூராட்சி நிறுவனங்களில் சமயாசமய,

பிரதியீட்டு மற்றும் ஒப்பந்த அடிப்படை ஊழியர்கள் ஆட்சேர்க்கப்படுவது இடைநிறுத்தப்பட்டுள்ள போதும், அந்த ஏற்பாடுகளுக்கு முரணாக 25 ஊழியர்கள் ஆட்சேர்க்கப்பட்டு மீளாய்வாண்டின் போது சபையின் நிதியிலிருந்து ரூபா 3,353,387 சம்பளமாக வழங்கப்பட்டிருந்தது. இச்சுற்றறிக்கை அறிவுறுத்துரைகளை மீறும் விதத்தில் ஆட்சேர்க்கப்பட்டால் நிறுவனத்தலைவர் அதற்குத் தனிப்பட்ட ரீதியில் கடப்பாடுடையவர் ஆவார் எனக் குறிப்பிடப்பட்டிருந்தது.

## 2.7 உள்ளகக் கணக்காய்வு

சபையில் போதியளவு உள்ளகக் கணக்காய்வு இடம்பெறாததுடன் மீளாய்வாண்டில் கணக்காய்வு மற்றும் முகாமைததுவக் குழுக்கள் அமைக்கப்படவுமில்லை.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கீழே காணப்படும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) செலவினக் கட்டுப்பாடு
(இ) வருவாய் நிர்வாகம்
(ஈ) சொத்து முகாமைத்துவம்